# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001.

## தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு "மறை திறவு" அணுகுமுறைப் பயிற்சி

*******

நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் உள்ள தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தில் சொல்வளத்தை மேம்படுத்துவதற்கான 'மறை திறவு அணுகுமுறை ' என்ற புதுமையானப் பயிற்சி மல்லசமுத்திரம் வட்டார வள மையத்தில் நடைபெற்றது.

பயிற்சியில் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தலைமையுரையில் பேசியதாவது – ஆங்கில மொழி உலக மொழியாக இருப்பதால் அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்தி கொள்வதற்கு இப்பயிற்சி உகந்ததாக இருக்கும் எனவும் அயல்மொழி வார்த்தைகளுக்கான சொற்பொருளை வழக்குமொழியில் தெரிந்து கொள்தல், மொழியின் சொற்தொகுப்பை அறிய முயற்சித்தல், சொல் உருப்படிகளை தெரிந்து கொள்தல், வினைச் சொற்களின் முக்கியமான அம்சங்களைப் புரிந்து கொள்தல், மொழியின் வாக்கிய நியமன வடிவங்களை அறிந்து கொள்ளும்போது எந்த ஒரு அயல்மொழியையும் பயன்படுத்தும் ஆற்றல் ஒருவருக்கு வந்துவிடும் என்றார். ஆங்கில மொழியில் 1,70,000 வார்த்தைகளே உள்ளன. சாதாரணமாக ஆங்கிலத்தை பள்ளியளவில் பேசுவதற்கு 500 வார்த்தைகளே போதுமானதாகும்.

ஆங்கிலத்தை பள்ளிகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் சரளமாக பேசவும், எழுதவும் அம்மொழியின் வார்த்தைகளின் வளத்தை அதிகரிக்கவும், வார்த்தைகளைப் புரிந்து கொள்ள உதவும் வகையில் 'மறை திறவு ' அணுகுமுறை என்ற புதுமையானப் பயிற்சி நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன ஆங்கில விரிவுரையாளர் திருமதி த. சுமதியால் வடிவமைக்கப்பட்டது.

அறியாத ஆங்கில வார்த்தையை தெரிந்து கொள்வதற்கான ஆவலை உருவாக்கவும், வார்த்தையைக் கண்டறியவும் உதவக்கூடிய வகையில் சில தகவல்கள், தடயங்கள், வழிகாட்டும் குறிப்புகள் போன்றவைகளை கருத்தாளர் திருமதி த. சுமதி வழங்கியபோது ஆசிரியர்கள் துப்பு கொடுக்கப்படும் வார்த்தையைக் கண்டறிந்தனர்.

ஆசிரியர்களுக்கு சொல்வளத்தை மேம்படுத்த உதவும் கட்டகம் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் த. சுமதி அவர்களால் வடிவமைக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஆங்கில வார்த்தைக்கு உரிய தமிழ்ச் சொல் , பட விளக்கம் மற்றும் அச்சொல்லின் ஆங்கில வாக்கியம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நிறுவன விரிவுரையாளர் திருமதி த.சுமதி அவர்கள் ஆங்கிலத்தில் சொல்வளத்தை மேம்படுத்த பல செயல்பாடுகளை ஆசிரியர்களுக்கு கொடுத்து எளிதாக ஆங்கிலத்தில் பேசும் திறனையும் , தொடர்பு கொள்ளும் திறனையும் மேம்படுத்தினார்.